வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 30.07.2025 புதன்கிழமை | இதழ் : 211 | பக்கங்கள் : 12

# மாகாண சபை தேர்தல் சிக்கலுக்கு பாராளுமன்றமே தீர்வு காணலாம்!

## தேர்தலை நடத்த நாம் தயார் என்கிறார் தேர்தல் ஆணையர்

கொழும்பு, ஜூலை 30


**மாகாண சபைகள் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்ற சட்டச் சிக்கலுக்கு பாராளுமன்றம் மூலமே தீர்வு காணமுடியும். தேர்தல் முறைமையை சிறந்த முறையில் தீர்மானித்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்த நாம் தயாராகவே உள்ளோம்" - இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்**

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

"கடந்த 10 மாத காலத்தில் 3 தேர்தல்களை நடத்தி முடித்துள்ளோம். உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலை சிறந்த முறையில் நடத்தினோம். தற்போது உள்ளூராட்சி அதிகார சபைகள் நிறுவப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குவது ஜனநாயகத்துக்கு விரோதமானது. மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியாக உள்ளது.

மாகாண சபைகள் தேர்தல் குறித்து உயர் நீதிமன்றம் கடந்த காலங்களில் பல வியாக்கியானங்களை

11



அரியாலை மனித புதைகுழி:

## நேற்று ஏழு எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 30

அரியாலை மனிதப் புதைகுழிகளிலிருந்து நேற்றைய தினமும் 7 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 3 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்ட அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமையும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தடயவியல் அகழ்வாய்வு தளம் இல. - 01, தடயவியல் அகழ்வாய்வு தளம் இல. - 02 என்று அடையாளப்படுத்தப்பட்ட புதைகுழிகளில் தொடர்ந்த ஆய்விலேயே நேற்றைய தினம் 7 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இவற்றுடன், இந்த

11

## 'ரிக்ரொக்' காதலனுக்காக நகைகளை திருடிய யுவதி

காதலன் உட்பட 7 பேர் கைது

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 30

ரிக்ரொக் மூலம் அறிமுகமாகி காதலனாக மாறியவருக்காக உறவினரின் வீட்டில் 19 பவுண் நகைகளை திருடிக் கொடுத்த யுவதி, அவரின் காதலன் உட்பட 7 பேரை சாவகச்சேரி குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற இந்த

11

## நீதிமன்றத்தில் சரணடைந்த நாமல் ராஜபக்ஷவுக்கு பிணை

கொழும்பு, ஜூலை 30

நீதிமன்றத்தில் சரணடைந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை முன்பிணையில் விடுவிக்குமாறு அம்பாந்தோட்டை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நீதிமன்றத்தில் சரணடைந்தமையை தொடர்ந்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து 2017 ஒக்ரோபர் 06ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையுடன் தொடர்புடைய வழக்கின் 35ஆவது பிரதிவாதியான நாமல்

11

## ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள் பயனற்றவை!

எதிர்க்கட்சி இவ்வாறு விமர்சனம்

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்கள் பிரயோசனமற்றவை. அவை இராஜதந்திர பயணங்களாக அன்றி வெறுமனே சுற்றுப்பயணங்களாகவே அமைந்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

11

## இலங்கை - இஸ்ரேல் உறவுகளை மீள்வரையறை செய்யும் காலமிது

இஸ்ரேலிய தூதுவர் ரூவான் அசார்

திருகோணமலை, ஜூலை 30

"இலங்கையின் உள்ளார்ந்த விடயங்களையும் உள்நாட்டு அரசியல் நிலைமையையும் மதிக்கிறோம். ஆனால், நெருக்கடிகளுக்கு எதிர்வினையாக மட்டுமல்லாமல், பரஸ்பர வாய்ப்புகள், சவால்களை எதிர்கொள்ளுதல் என்னும் அடிப்படையில் நமது உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்று நான் நம்புகிறேன்" - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் இலங் கைக்கான இஸ்ரேலிய தூதுவர்

11



படம் - ஐ. சிவசாந்தன்

## அரோகரா கோஷம் முழங்க நல்லூரானுக்கு கொடியேற்றம்

பல்லாயிரம் பக்தர்கள் பங்கேற்பு


யாழ்ப்பாணம், ஜூலை 30

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

காலை 8.15 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து விசேட

11

## நல்லூர் ஆலய வளாகத்துக்குள் அத்துமீறிய இராணுவ வாகனம்!



- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர் கந்தசுவாமி ஆலய வளாகத்துக்குள் இராணுவ வாகனம் அத்துமீறி நுழைந்தமையால் பக்தர்கள் அதிர்ச்சியடைந்ததுடன், விசனமும் வெளியிட்டுள்ளனர்.

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நல்லூர் பெருந்திருவிழாவை

11

## வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 30

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை ஓட்டோவில் வந்த மூவர் குழு வாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

மானிப்பாய் - கட்டுடை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சம்பவம்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், திருமுறையிசை நிகழ்ச்சியில் பாட்டு - ச. நித்தியானந்தம், வயலின் - கே. வேலதீபன், மிருதங்கம் - மு. சுலக்சன், கெஞ்சிரா - நி. மோகனதர்சன், இசையரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - பிரகதீஸ் சண்முகராஜா, வயலின் - கிருஷ்ணி சண்முகராஜா, மிரு தங்கம் - வரத ராஜசர்மா றமண சர்மா, கெஞ்சிரா - றமணசர்மா லயசர்மா ஆகியோர் வழங்குவர் (ஐ)

## யோகா பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

உலக சமாதான ஆலயத்தின் அனுசரனையுடன் மேற்கொள்ளப் படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்புகள் இணுவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறவுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில், யோகக்கலை பற்றிய விளக்கமும்,நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் யோகக்கலையுடன் சுவாச பயிற்சி வகைகள் மற்றும் தியாணப் பயிற்சியை மேற்கொளவது தொடர்பிலும் விரிவான செய்முறை விளக்கங்கள் வழங்கப் படும்.

இந்தப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப் படும்.

இதில், இருபாலரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள நாட்டமுள்ளவர்கள் 077 047 6398 எனும் கைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## பண்ணை கடற்கரை சுத்தப்படுத்தப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரையை சுத்தப்படுத்தும் பணி நேற்று இடம்பெற்றது.

"ஓர் அழகான கடற்கரை மனங்கவரும் ஒரு சுற்றுலாத்தளம்" என்ற கருப்பொருளில் நாடளாவிய ரீதியில் நேற்று கடற்கரையை சுத்தப் படுத்தும் பணி ஆரம்பமானது.

யாழ். மாவட்டத்தில் அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் இந்தப் பணி யாழ். பண்ணை கடற்கரையில் ஆரம்பமானது. காலை 7 மணி முதல் கடற்கரையை சுத்தப் படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதில், அரச அதிகாரிகள், இராணுவம், பொலிஸார் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-03-05)


# INVITATION FOR BID 2025/10
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-30 To 2025-08-14** during **09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated intable below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2025-07-30 To 2025-08-13** | | | | |
| | **Pre-Bid Conference** | | | **At 10.30 A.M on 2025-08-06** | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **At 2.00 P.M on 2025-08-14** | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (with out VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period (Days)** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| **NP/14/41(13)/4/Council/05/2025/26** | **Package 01 * Construction of Kiralee Veethy – Stage II Puttur East** | **5.07** | **49** | **C8 or above (High way)** | **3,500.00** | **51,000.00** | **27.11.2025** | **77** |
| **NP/14/41(13)/4/Council/05/2025/27** | **Package 2 * Reconstruction of Box Culvert and Retaining wall in Vishnu Vidyalaya backside road (Sarasvathy veethy – Puttur East. * Reconstruction of Box Culvert at at Ulavikkulam Pillaiyaar Kovil Veethy - Atchuveli. * Construction of Box Culvert at College of education Back side road - Kopay** | **4.90** | **63** | **C8 or above (High way)** | **2,500.00** | **50,000.00** | **30.10.2025** | **49** |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.** **30/07/2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.07.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னிலங்கையின் புலிக்காய்ச்சல்

சமீபத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜேர்மன் சென்றிருந்தார். இதன்போது, சம்பிரதாயபூர்வமான அரசாங்க சந்திப்புகளில் ஈடுபட்டார். தென்னிலங்கை அரசியலில், அதிகாரங்களை இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் எதனைப்பிடித்து மேலே வருவதென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். இந்த வரிசையில் இருப்பவர்களில் உதய கம்மன்பிலவும் ஒருவர். அவர் ஒரு கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரை சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தார் என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. எனவே, அதனைப் பற்றி ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

2009இல் யுத்தம் முடிவுற்ற பின்னரான சூழலில், யுத்த வெற்றிதான் ராஜபக்ஷக்களின் ஒரேயோர் அரசியல் முதலீடாக இருந்தது. அன்றைய சூழலில் அதனை விடவும் வேறொரு முதலீடு தேவைப்பட்டிருக்கவும் இல்லை. இதன் காரணமாக அந்த முதலீட்டைக் கொண்டே ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் தங்களின் அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொண்டனர். ஆனால், நாட்டில் ஏற்பட்ட புதிய நெருக்கடிகளை சமாளிப்பதற்கு யுத்த வெற்றிவாதம் பயன்படவில்லை. ஏனெனில், பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பதுபோல் பொருளாதார நெருக்கடிக்கு முன்னால் ராஜபக்ஷக்களின் கதாநாயகக் கதைகளை சிங்கள மக்கள் தூக்கி வீசிவிட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கோட்டாபயவுக்கு எதிராக சிங்கள மக்கள் திரும்பினர். கோட்டாபய "கொட்டியா"க்களை ஒழித்தவர் என்னும் கதைகள் எடுபடவில்லை.

புதிய நெருக்கடிகளின் விளைவாகவே அநுர குமாரவின் பக்கமாக சிங்கள மக்கள் திரும்பினர். அநுர குமார அலைக்கு வெற்றிவாதங்கள் தேவைப்படவில்லை - அது வெற்றிவாதங்களை தோற்கடிக்கும் ஓர் அலையாகவே எழுச்சியுற்றது. அந்த எழுச்சியில் சிங்கள மக்களோடு தமிழ் மக்களும் இணைந்து கொண்டனர். இதன் விளைவுதான் வடக்கு - கிழக்கிலும் அதிகமான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாகத் திரும்பும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அநுரவை வீழ்த்துவதற்கு எவ்வாறான ஆயுதங்களை எடுப்பது என்று தெரியாமல் தடுமாறிக்கொடிருக்கும் அவரின் அரசியல் எதிரிகள் அவ்வப்போது புலிக் கதைகளைச் சொல்லி சிங்கள கடும்போக்குவாதிகளை உசுப்பிடலாம் என்று யோசிக்கின்றனர். ஆனால், அது பெரியளவு எடுபடவில்லை. ஏனெனில், புலிக் கதைகளில் உண்மை இல்லையென்பதை சிங்கள மக்களும் புரிந்து கொள்கின்றனர். புலிகள் இயக்கமே இல்லை என்றானபின்னர் புலிகளின் முக்கியஸ்தர்கள் என்று எவர் இருக்கப் போகிறார். புலிகள் இயக்கம் என்பது எந்தவொரு முக்கியஸ்தரிலும் தங்கியிருந்த இயக்கம் அல்ல. அதேவேளை அதனை முக்கியஸ்தர்கள் வழிநடத்தவும் முடியாது - அது பிரபாகரனின் இயக்கம். பதினாறு வருடங்களாக பிரபாகரன் பற்றிய கதைகளை புனைந்து வந்தவர்களே தற்போது அவர் இல்லையென்பதை ஏற்றுக்கொண்டு விட்டனர். இந்த நிலையில் புலிகளின் முக்கியஸ்தரை சந்திப்பதற்கு ஜனாதிபதி ஜேர்மனி சென்றாரெனக் கூறுமளவுக்கு தென்னிலங்கையின் ராஜபக்ஷ அணி, மிகவும் பலவீனமான நிலையிலிருக்கின்றது. புலியை விட்டால் அவர்களுக்கு அரசியல் செய்ய வேறு எதுவும் இல்லையென்பதுதான் அவர்களின் கையறு நிலையாகும்.

# படுகொலையான இளைஞனுக்கு நீதி கோரி மல்லாவியில் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூலை 30


வெளிநாடு செல்லவிருந்த நிலையில் படுகொலை செய்யப்பட்ட ஆனந்தராசன் சஜவனுக்கு நீதி கோரி நேற்று மல்லாவியில் போராட்டம் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்தும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூறியும் பொலிஸார் விரைவாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மல்லாவியை சேர்ந்த மக்கள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கம் என்பன இணைந்து இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தன.

மல்லாவி பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமான பேரணி மல்லாவி பொலிஸ் நிலையம் வரை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தவர்கள், "சஜீவன் மரணத்துக்கு நீதி வேண்டும்", "கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்து", "விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்று தா", "எமது நண்பனின் மரணத்துக்கு நீதி வேண்டும்", "வஞ்சகரின் சூழ்ச்சிக்கு முடிவில்லையா", "எமது பிள்ளைக்கு நீதி வேண்டும்" - என்று கோஷம் எழுப்பினர்.




இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றைய தினம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இதேநேரம், போராட்டத்தில் பங்கேற்றவர்கள் விரைவான விசாரணையை முன்னெடுக்காதுவிடின் தாம் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என்று கூறியதுடன், இதன்போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரனால் மனு ஒன்றும் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

படுகொலையான ஆ. சஜீவன் கனடா செல்வதற்கு தயாராக இருந்த நிலையில் கடந்த 2024ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி பெருந்தொகை பணத்துடன் சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தார். இந்நிலையில், மறுநாள் வவுனிக்குளம் பகுதியிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# கௌதாரிமுனையில் நேற்று சிரமதானம்!

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி - கௌதாரிமுனை கடற்கரை பகுதி நேற்று சிரமதானம் மூலம் சுத்தமாக்கப்பட்டது.

ஓர் அழகான கடற்கரை மனங் கவரும சுற்றுலா தளம் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு 55ஆவது படைப்பிரிவின் மேஜர் ஜென்ரல் அருண விஜகோன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# பொற்பணி செம்மல் விருது வழங்கிக் கௌரவிப்பு!




யாழ்ப்பாணம், ஜூலை 30

தந்தை செல்வா நற்பணி மன்றம் ஐவருக்கு பொற்பணி செம்மல் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு அண்மையில் வட்டுக்கோட்டை மத்திய வித்தியாலயத்தில் மன்றத்தின் செயலாளர் எஸ். கே. தளையரட்ணத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை மத்திய வித்தியாலய அதிபர் த. சசிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச.ஜெயந்தன், சமூக - சமய செயல்பாட்டாளர்களான நா. பாலகிருஷ்ணன், ஜெயந்திரகுமார், வி.தயாசீலன், எஸ். ஜீவேஸ்வரன் ஆகியோர் பொற்பணி செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**இடபம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள்.

**மிதுனம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்

**கடகம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் நினைப்பதை முடித்துக் காட்டுவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது.

**துலாம்**

திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**

உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்**

குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். மகிழ்ச்சியான நிலை உருவாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் தலை தூக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் புது முடிவுகளை தவிர்க்கவும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மீனம்**

தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். அமைதி நிலவும். திறமைகள் வெளிப்படும் நாள்.

# இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உதவித்தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகையானது யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் வைலட் நிக்லஸ் மற்றும் மாவட்ட முகாமையாளர் திருமதி. எம். தர்சினி மற்றும் உதவித் திட்ட இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுடன் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி தொடர்பாகவும் அரசாங்க அதிபர் கலந்துரையாடினார்.

உதவித்தொகையாக தலா ஒருவருக்கு 90, 000 ரூபாய் வீதம் கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய 03 குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேருக்கு 8 இலட்சத்து 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (எ)

# யாழில் நடனம் ஆடிய இளைஞன் திடீரென கீழே விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழில் பூப்புனித நீராட்டு விழாவில் நடனம் ஆடிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பு - பல்லசுட்டி பகுதியைச் சேர்ந்த அன்னராசா அலெக்ஸன் என்ற 19 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

மல்லாகம் - பயிரிட்டால் பகுதியில் நேற்று முன்தினம் பூப்புனித நீராட்டுவிழா கொண்டாட்டம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு சென்ற இளைஞன் இரவு அங்கு உணவு அருந்திக்கொண்டிருந்தார்.

இதன்போது ஒலிபெருக்கியில் பாடல் ஒலிக்கும்போது எழுந்து சென்று அந்த பாடலுக்கு இளைஞர்களுடன் சேர்ந்து நடனமாடிய நிலையில் குறித்த இளைஞன் திடீரென மயக்கமடைந்தார்.

இந்த நிலையில் அவரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான உடற்கூற்று பரிசோதனைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டன.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

(எ-05)

# 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் கொள்வனவு செய்ய வவுச்சர் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாநகர சபை உறுப்பினருக்கான மாதாந்த கொடுப்பனவுடன் தனது பணத்தில் 5000 ரூபாயும் சேர்த்து மாதம் 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர் வழங்கும் திட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 24ஆம் வட்டார யாழ். மாநகர சபை உறுப்பினர் இரத்தினம் சதீஸ் ஆரம்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இனிவரும் மாதங்களில் எனது வட்டாரத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு தொடர்ந்து 4 வருடங்களும் நிதியுதவி வழங்கவுள்ளேன். தற்போது முன்னுரிமையில் அருள்மாதா கோவிலடி பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது என இரத்தினம் சதீஸ் தெரிவித்தார். (எ)

# காரைநகர் பகுதியில் கண்டல் தாவர நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைமையில் செயல்படும் அனர்த்த பாதிப்பு குறைப்பு மற்றும் காலநிலை நிலைத்தன்மை திட்டத்தின் கீழ், அதன் யாழ்ப்பாணப் பிராந்திய குழு மற்றும் காரைநகர் மீனவர் சமூகம் இணைந்து காரைநகர் பகுதியில் கண்டல் தாவர நடுகை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெற்றிகரமாக செயல்படுத்தினர். ஆரம்பத்தில், கண்டல் தாவரங்களின் முக்கியத்துவம், சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அவற்றின் பங்களிப்பு மற்றும் கடற்கரை தாழ்வுநிலங்களை பாதுகாப்பதிலுள்ள அவற்றின் இடம் குறித்து சிறிய விழிப்புணர்வு நிகழ்வும் நடைபெற்றது.



இதன்பின், சமூகத்தினர் நேரடியாக பங்கேற்று கண்டல் தாவரங்களை நட்டினர். இந்த நடவடிக்கைகள், கரையோர சூழலியல் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, மீன்பிடி வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும். முக்கியமாக, இந்த கண்டல் தாவரங்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பொறுப்பை, உள்ளூார் மீனவர் சமூகம் தங்களே ஏற்பதன் மூலம், நீடித்த பாதுகாப்பை உருவாக்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு பிரதியமைச்சராக படை அதிகாரி; ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு பாதிப்பு

## அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ

கொழும்பு, ஜூலை 30

**பாதுகாப்பு பிரதியமைச்சராக மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர பதவிவகிப்பது 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனக் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித்தின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.**

இந்த விடயத்தில் அரசாங்கம் பொருத்தமான தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் இராணுவ அதிகாரி பாதுகாப்பு பிரதியமைச்சராக பதவிவகிப்பது விசாரணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என கத்தோலிக்க திருச்சபையும் கருதுகின்றது என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இங்கு ஒரு பிரச்னை இருப்பதாக நாங்களும் கருதுகின்றோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளை அவரது அமைச்சு கையாளவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் பொலிஸாரும் சி.ஐ.டியினருமே விசாரணைகளை கையாள்கின்றனர். ஆனால் அவர் பிரதியமைச்சராக பதவி வகிக்கின்றார்.இதனால் விசாரரணைகள் பாதிக்கப்படலாம்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனம் செலுத்தவேண்டும். உரிய தீர்மானத்தை எடுக்கவேண்டும். முன்னாள் இராணுவ அதிகாரியொருவர் பிரதியமைச்சராக பதவி வகிப்பதால் மக்கள் இயல்பாகவே விசாரணைகள் மீது அவர் செல்வாக்கு செலுத்தலாம் என கருதுவார்கள்.

இதன் காரணமாக விசாரணைகளின் நம்பகதன்மை குறித்த கேள்வி எழும்-என்றார். (அ)

# எந்தத் தடைகள் வரினும் நீதி நிலைநாட்டப்படும்!

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து பிரதமர் ஹரிணி உறுதி

கொழும்பு, ஜூலை 30

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதுவும் மறைக்கப்படாது. எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணையை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏற்கின்றனரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினை இல்லை. ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடரும்-என்றார். (அ)

# முஸ்லிம் திருமண-மணவிலக்கு சட்டத்தில் திருத்தம் வேண்டும்!

## வலியுறுத்துகிறார் அலி சப்ரி



கொழும்பு, ஜூலை 30

முஸ்லிம் திருமண மற்றும் மணவிலக்குச் சட்டத்தில் சீர் திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை தான் நீதி அமைச்சராக இருந்தபோதே வலியுறுத்தியதாக, முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தான் நீதி அமைச்சராக வெறும் 19 மாதங்கள் மாத்திரமே பணியாற்றிய தால், இதனை நடைமுறைப் படுத்த முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் அந்தக் குறுகிய காலத்திலும், தாங்கள் 100 இற்கும் மேற்பட்ட பழமையான சட்டங்களை மீண்டும் ஆய்வு செய்ததாகவும், அவற்றில் சுமார் 40 சட்டங்கள் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், சட்டம் செயல்படுத்துவது எளிதான அல்லது விரைவான செயல்முறை அல்ல என்றும் இது ஒரு சிந்தனையுடன் கூடிய மற்றும் சிக்கலான பயணம் என்றும் அலி சாப்ரி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், சிலர் இஸ்லாமியர்களுக்கான தனிப்பட்ட சட்டத்தை முற்றிலுமாக நீக்க விரும்பியதாகவும், எனினும் அவர்களின் காரணங்கள் நீதி அல்லது நியாயத்தின் அடிப்படையில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் தம்மை பொறுத்தவரை, அந்த சட்டத்தை நீக்குவதை விட, சீர்திருத்தமே தேவைபட்டதாகவும் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (அ)

# தேசபந்துவை பதவி நீக்கம் செய்யும் யோசனைக்கு மூன்று கட்சிகள் ஆதரவு

கொழும்பு, ஜூலை 30

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்த பதவியிலிருந்து நீக்குவதற்கான யோசனை தொடர்பான விவாதத்தின்போது 3 அரசியல் கட்சிகள் அந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தீர்மானித்துள்ளன.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளே யோசனைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தீர்மானித்துள்ளன.

அதன்போது பொதுஜன பெரமுன கட்சி அந்த யோசனைக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளதுடன், புதிய ஜனநாயக முன்னணி அது தொடர்பில் இதுவரை தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை என அந்த கட்சி தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று முன் தினம் கருத்து தெரிவித்த புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஓரிரு தினங்களில் கட்சி கூடி அதற்கான முடிவை எடுக்கும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம்,

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்பைத் தெரிவித்து வரும் கட்சி என்ற வகையில் மேற்படி யோசனைக்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது நியமனத்திற்கும், போராட்டத்தின் மீதான தாக்குதலுக்கும் தமது கட்சி ஆரம்பத்திலிருந்தே கடும் எதிர்ப்பை தெரிவித்து வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், அந்த அனைத்து காரணங்களையும் முன்வைத்து மேற்படி யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாகவும்" குறிப்பிட்டுள்ளார்.

பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை 2002ஆம் ஆண்டின் 5ஆம்இலக்க அலுவலர்களை அகற்றுதல் நடவடிக்கை முறை சட்டத்தின் 17ஆம் வாசகத்தின் பிரகாரம் அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதத்தை ஒகஸ்ட் 05ஆம் திகதி நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த யோசனை தற்போது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புலிகளின் முக்கியஸ்தர் நெடியவனை சந்திக்க ஜேர்மனி சென்றாரா அநுர?

## கேள்வி எழுப்புகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் நெடியவனை சந்திப்பதற்காக ஜேர்மனி சென்றாரா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி ஜேர்மனி செல்வதற்கு முன்பு, விடுதலை புலிகளின் முக்கியஸ்தர் நெடியவனை சந்திக்க அந்நாட்டுக்கு செல்வதாக சமூக ஊடகங்களில் ஒரு கதை பரவியது.

இதனால், ஜேர்மன் அரசாங்கத்தின் தலைவரான சான்சலரை ஜனாதிபதி சந்திக்க மாட்டார் என்றும் சமூக ஊடகங்களில் பலரும் கூறினர்.

எனவே, நாங்கள் ஒரு கூட்டத்தை நடத்தி, ஜேர்மனி செல்வதற்கு முன்பு இந்தக் கதைகளின் உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு அவரிடம் கோரிக்கை விடுத்தோம்.

ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. சமூக ஊடகங்களில் கூறப்பட்டபடி ஜேர்மன் அரசாங்கத்தின் தலைவரான சான்சலரை ஜனாதிபதி சந்திக்கவில்லை. மாறாக, ஜேர்மனியில் ஜேர்மன் ஜனாதிபதியையும் வெளியுறவு அமைச்சரையும் மட்டுமே அவர் சந்தித்தார்.

ஜேர்மனியின் அரசாங்க வடிவம் இலங்கையிலிருந்து வேறுபட்டது. இலங்கையின் ஜனாதிபதி, அரசின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். ஜேர்மனியின் ஜனாதிபதி நாட்டின் தலைவராக இருந்தபோதிலும் அரசாங்கத்தின் தலைவராக இல்லை.

ஜேர்மன் ஜனாதிபதியைச் சந்திக்க ஜெர்மனி செல்வது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை விடுத்து இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவைச் சந்திக்க இந்தியா சென்று வருவது போன்றது.

எனவே, ஜனாதிபதி இவற்றுக்கு விளக்கமளிக்க வேண்டும்-என்றார். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டையில் மத்தள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அங்குனுகொலவெவ பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாக மத்தள பொலிஸார் தெரிவித்தனர்.

மத்தள பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொனராகலை - தணமல்வில பகுதியை சேர்ந்த 52 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்தள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துகளால் நாட்டில் 7 மாதங்களில் 1355 பேர் பலி

கொழும்பு, ஜூலை 30

**இந்த ஆண்டு இதுவரை 1,355 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளது.**

2024 ஆம் ஆண்டில், நாடு முழுவதும் வீதி விபத்துகளால் மொத்தம் 2,521 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரெட்ரிக் வூட்லர் குறிப்பிட்டார்.

தினமும் நிகழும் உயிரிழப்புகளைக் குறைப்பதில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மீது, சட்டம் கடுமையாக அமல்படுத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## நாமலே அடுத்த ஜனாதிபதி!

கொழும்பு, ஜூலை 30

நாமல் ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதியென புலனாய்வுப் பிரிவு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆசியாவிலேயே மிக இள வயது தலைவர் நாமல் என அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. தூதரகங்களுக்கு செல்லும் போதும் அடுத்த ஜனாதிபதி நாமல் என்று கூறுகின்றனர் எனவும் ஜோன்ஸ்டன் குறிப்பிட்டார். (அ)

## ஜூலை மாத முதியோர் கொடுப்பனவு இன்று முதல்

கொழும்பு, ஜூலை 30

ஜூலை மாதத்திற்கான முதியோர் கொடுப்பனவு, இன்று முதல் அஸ்வெசும பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 600,768 பயனாளிகளுக்கு மொத்தம் 3,003,840,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதியுள்ள பயனாளிகள் நாளை முதல் தங்களது அஸ்வெசும பயனாளி கணக்கிலிருந்து உரிய தொகையைப் பெறலாம் என சபை தெரிவித்துள்ளது. (அ)

## ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம்

கொழும்பு, ஜூலை 30

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படும் என கணிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு மற்றும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையிலும், வவுனியா, நுவரெலியா, திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, களுத்துறை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை மற்றும் அனுரா தபுரத்தில் நல்ல நிலை நிலையிலும் காணப்பட்டது.

அடுத்த 24 மணி நேரத்தில் காற்றின் தரச்சுட்டெண் அளவு 36 - 72 க்கு இடையில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூவர் போதை மாத்திரைகளுடன் கைது!

கொழும்பு, ஜூலை 30

கொஹுவல பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர், அவரது வீட்டில் போதை மாத்திரைக் களஞ்சியம் ஒன்றை பராமரித்து, நாடு முழுவதும் விநியோகித்து வந்த தாகக் கூறப்படும் சம்பவத்தில், அவரது மனைவி மற்றும் மருந்தக உரிமையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 20 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொரலஸ்கமுவ, பெல்லன்வில, ஜய மாவத்தைப் பகுதியில் தற்காலிகமாக வசிக்கும் இந்தக் கான்ஸ்டபிளின் வீட்டில், 150 மி.கி. போதை மாத்திரைகள் கொண்ட 21 பெட்டிகள் மற்றும் 300 மி.கி. போதை மாத்திரைகள் கொண்ட ஒரு பெட்டி என மொத்தம் 1,330,420 மாத்திரைகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில், இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளில், 14 ஆண்டுகளாக கொஹுவல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் இந்தக் கான்ஸ்டபிள், மருந்தக உரிமையாளரால் வழங்கப்பட்ட போதை மாத்திரைகளை தனது வீட்டில் களஞ்சியப்படுத்தி, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விநியோகித்து வந்தமை தெரியவந்துள்ளது.

மூவரும், போதைப்பொருள் வைத்திருத்தல், கடத்தல் மற்றும் குற்றத்திற்கு உதவி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கான்ஸ்டபிளும் அவரது மனைவியும் 35 வயதுடையவர்கள். மருந்தக உரிமையாளர் 49 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## முறையாகப் பொதி செய்யப்பட்ட தே.எண்ணெய் மட்டுமே விற்கலாம்!

கொழும்பு, ஜூலை 30

எதிர்காலத்தில் முறையாக பொதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயை மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்க முடிவு செய்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொதி செய்யப்படாத தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாக வந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து, நாடு முழுவதும் 75 விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 22 மாதிரிகளில் பிற பொருட்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

இதன்படி, நுகர்வோருக்கு தரமான தேங்காய் எண்ணெயை உறுதிப்படுத்த, தேங்காய் அபிவிருத்திச் சபை மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவை இணைந்து, பொதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயை மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்க தீர்மானித்துள்ளன.

இந்த விதிமுறையை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அனைத்து பொதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்களும் எஸ்.எல்.எஸ் தர முத்திரை மற்றும் உரிய லேபிள்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

## தனது நிறுவனத்தின் இயந்திரங்களை விற்று ரூ. 70 இலட்சம் மோசடி செய்த ஊழியர் கைது!

கொழும்பு, ஜூலை 30

தனது நிறுவனத்துக்கு சொந்தமான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தொலைக் காட்சிப்பெட்டிகளை விற்பனை செய்து 70 இலட்சத்து 37 ஆயிரத்து 400 ரூபா பணத்தை மோசடி செய்ததாக கூறப்படும் ஊழியர் ஒருவர் களனி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொடகல பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் குறித்த நிறுவனத்தில் பணிபுரிந்து வந்துள்ள நிலையில் தனது நிறுவனத்துக்கு சொந்தமான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தொலைக் காட்சிப்பெட்டிகளை விற்பனை செய்து, நிறுவனத்துக்கு கிடைக்க வேண்டிய 70 இலட்சத்து 37 ஆயிரத்து 400 ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 35 நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் 13 தொலைக்காட்சிப் பெட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இன்று புதன் கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து ஜெனிவாவில் முறையிட தீர்மானம்

கொழும்பு, ஜூலை 30

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்து செய்யப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் செயலாளர் பிரேமசிறி மானகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த விவகாரம் தொடர்பாக சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்திடம் முறையிட வுள்ளதாகவும் மானகே குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கும், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான சிறப்பு உரிமைகளை இரத்து செய்வதற்குமான ஒரு சட்ட மூல வரைவுக்கு அமைச்சரவை கடந்த மாதம் அங்கீகரித்த நிலையிலேயே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

## ஹேமசிறி, பூஜித்துக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் மீண்டும் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 30

2019 ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் காவல்துறை மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செப்ரெம்பர் 18 ஆம் திகதியன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில், முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த போதிலும், குற்றவியல் கவனக்குறைவு காரணமாக கடமையைச் செய்யத் தவறியமைத் தொடர்பில், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் ட்ரயல்-அட்-பார் அமர்வில் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

குறித்த வழக்கின் விசாரணை இன்று இடம்பெற்றபோது, சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் சுதர்சன் டி சில்வா, நீதிபதி ஆதித்ய படபெந்திகே, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதால், வழக்கு விசாரணைக்கு புதிய திகதியை நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

முன்னதாக, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்த வழக்கின் பிரதிவாதிகளான ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவித்து விடுதலை செய்திருந்தது.

இருப்பினும், சாட்சிகளை அழைக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதற்கான மேல் நீதிமன்றத்தின் முடிவை சட்டவிரோதமானது என்று அறிவிக்கக் கோரி, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

இந்த மேன்முறையீட்டை பரிசீலித்த உயர்நீதிமன்றம், புதிய விசாரணையை நடத்த வேண்டும் என்று மேல் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது. (அ)

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அருகே இலஞ்சம் பெற்ற தரகர் சிக்கினார்!

கொழும்பு, ஜூலை 30

நாரஹேன்பிட்டியில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அருகில் இலஞ்சம் வாங்க முயன்ற தரகர் ஒருவரை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளது.

ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது 10,000 ரூபாய் இலஞ்சம் வாங்கியதாக குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளால் மோட்டார் சைக்கிளின் இரண்டாம் நிலை பதிவுச் சான்றிதழை அசல் பதிவுச் சான்றிதழாக மாற்றுவதற்கு சந்தேக நபர் 30,000 ரூபாய் இலஞ்சம் கோரியிருந்தார்.

இது தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொண்ட போது குறித்த நபர் கோரியிருந்த பணத்தில் 10 ஆயிரம் ரூபாவை பெற்றபோது இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட உள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியந்த ஜயக்கொடி கைது!

கொழும்பு, ஜூலை 30

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கெஹெல் பத்தர பத்மே என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவர் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பொய்யான முறைப்பாட்டை அளித்த சம்பவம் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி உடல்நலக் குறைவு காரணமாக ராகம வைத்தியசாலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் காவலில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வங்காள விரிகுடா நிலஅதிர்வு இலங்கைக்குப் பாதிப்பில்லை!

கொழும்பு, ஜூலை 30

வங்காள விரிகுடாவில் உள்ள அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அருகே நேற்று அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் நேற்று அதிகாலை 12.11 மணிக்கு 6.3 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்தியாவின் தேசிய நில அதிர்வு மையத்தின்படி, நிலநடுக்கத்தின் ஆழம் 10 கி.மீ. ஆகும்.

நிலநடுக்கத்தினால் எந்த சேதமோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்பட்டதாக எந்த தகவலும் இதுவரை இல்லை.

இந்த சம்பவம் குறித்து அறிக்கை வெளியிட்ட புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் ஜெனரல் தீபானி வீரக்கோன், நிலநடுக்கத்தால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

இலங்கையில் இருந்து சுமார் 260 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், அதன் அளவு இலங்கையில் ரிச்டர் அளவு கோலில் 6.6 ஆக பதிவானதாகவும் அவர் கூறினார்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல பின்னதிர்வுகள் பதிவாகியிருந்தாலும், இந்த நிகழ்வு குறித்து பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை என்று அவர் மேலும் கூறினார். (அ)

## நாடு கடத்தப்பட்டிருந்த வெலிகம சஹறான் கைது!

கொழும்பு, ஜூலை 30

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கும்பல் உறுப்பினரான 'வெலிகம சஹறான்' என்று அழைக்கப்படும் சஹறான் சிசிகலும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவின், சென்னையில் இருந்து நேற்று முன் தினம் நாடு கடத்தப்பட்ட நிலையில், விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகம பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய இவர், பாணந்துறை மற்றும் களுத்துறையில் நடந்த இரண்டு துப்பாக்கிச் சூடு சம்பவங்களிலும், மட்டக்குளியவில் "பத்தே சுரங்க" என்ற நபரை சுட்டுக் கொன்ற சம்பவத்திலும் முக்கிய சந்தேக நபர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## துமிந்த திசாநாயக்க விடுவிப்பு



கொழும்பு, ஜூலை 30

தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி விவகாரம் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவை வழக்கில் இருந்து விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கியின் உரிமை தொடர்பான விசாரணையில் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவை, அவ்வழக்கிலிருந்து விடுவிக்க கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நேரடி மற்றும் சூழ்நிலை ஆதாரங்கள் இல்லாததால், துமிந்த திஸநாயக்கவை விடுவிக்க நீதவான் சதுரிகா டி சில்வா உத்தரவிட்டார்.

ஹெவ்லொக் நகரில் உள்ள ஆடம்பர வீட்டு வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கியின் உரிமை தொடர்பான விசாரணையில், கடந்த மே 23 ஆம் திகதி துமிந்த திஸநாயக்க கைது செய்யப்பட்டு, கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டார்.

பின்னர், பிணை மனு பரிசீலிக்கப்பட்டு, கடந்த 14 ஆம் திகதி நிபந்தனைகளின் பேரில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாலைதீவுடனான ஒத்துழைப்பை மேம்படுத்த அதிக முக்கியத்துவம்!

### ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, ஜூலை 30

**மாலைதீவுடனான ஒத்துழைப்பை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், எதிர்வரும் ஆண்டுகளில் இந்த ஒத்துழைப்பு தொடர்ந்து வலுப்பெறும் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மாலைதீவுக்கான தனது அரச விஜயத்தின்போது ஜனாதிபதி ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளதாவது-

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகள், நட்பு கூட்டாண்மை, நெருங்கிய நட்புறவு மற்றும் எதிர்கால ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையிலான மாலைதீவுக்கான எனது முதல் அரச விஜயத்தில் மாலேயிற்கு வருகை தரக்கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தப் பயணம் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுக்குப் புதிய உற்சாகத்தையும் பலத்தையும் சேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையும் மாலைதீவுகளும் முறையான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் எனது மாலைதீவு விஜயம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

எனக்கும் எனது பிரதிநிதிகளுக்கும் கிடைத்த அழைப்பிற்கும் அமோக வரவேற்புக்கும் விருந்தோம்பலுக்கும் அதிமேதகு ஜனாதிபதி முகமத் முய்சு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நீண்ட கால உறவு உள்ளது.

இந்து சமுத்திரத்தில் உள்ள நமது இரு நாடுகளும் பழங்கால கடல்வழி வர்த்தகப் பாதைகள் மற்றும் பொதுவான வரலாறு ஆகியவற்றுடன் நமது தொடர்புகளால் வளம் பெற்றுள்ளன.

சிறிது நேரத்திற்கு முன்பு, ஜனாதிபதி முய்சுவும் நானும் எங்கள் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

நமது உறவுகளின் தற்போதைய நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டதுடன், மேலும் எதிர்காலத்தில் பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் நமது ஒத்துழைப்பை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்.

எப்போதும் இலங்கைக்கு வழங்கும் நிலையான ஆதரவிற்கு ஜனாதிபதி முய்சு மற்றும் மாலைதீவு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நமது மக்களின் பொது நலனுக்காக நமது ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், நமது உறவை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி முய்சுவும் நானும் இனங்கண்டோம்.

மாலைதீவில் ஏராளமான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியதற்காக ஜனாதிபதி முய்சுவுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மாலைதீவின் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பை காண்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதேபோல், இலங்கையில் உள்ள மாலைதீவு மக்கள், இலங்கை பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்பை நாங்கள் பாராட்டுகிறோம்.

கல்வித் துறையில் இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையே வலுவான பங்காளித்துவம் உள்ளது.

பல ஆண்டுகளாக, இலங்கையர்களாகிய நாங்கள் மாலைதீவு மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்கு கல்வி வழங்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளோம்.

இத்துறையில் மேலும் ஒத்துழைப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து ஜனாதிபதி முய்சுவும் நானும் கலந்துரையாடினோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு மற்றும் முக்கிய துறைகளில் முதலீடுகள் குறித்தும் நாங்கள் கவனம் செலுத்தினோம்.

மாலைதீவு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்கு நம்பகமான இடமாக இலங்கையை எப்போதும் பார்க்க முடியும் என்று நான் தெரிவிக்கிறேன- என்று கூறியுள்ளார். (அ)

## சிறுத்தை ஒன்று சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூலை 30

மத்திய மாகாணத்தின் கட்டுகித்துல வனப் பகுதியில் சிறுத்தை ஒன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

ஒரு வயது மதிக்கத் தக்க ஆண் சிறுத்தை ஒன்றே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தையின் உயிரிழப்புக்கு ஹக்கா பட்டாஸ் பொறிகள் தான் காரணம் என்று சந்தேகிக்கப்படுவதாக இலாப நோக்கற்ற சிறுத்தை பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், வனவிலுக்கு பாதுகாப்புத் துறை அந்த சிறுத்தையின் உடலை மீட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இலாப நோக்கற்ற சிறுத்தை பாதுகாப்பு அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## கண்டியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் வீட்டிலிருந்து சடலங்களாக மீட்பு

கொழும்பு, 30

கண்டியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் வீட்டிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

யட்டியனுவர பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மற்றும் அவரது மனைவி, மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம்யஹல தென்ன பகுதியில் உள்ள அவர்களது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 52 வயதுடைய பிரதேச சபை உறுப்பினர் அவரது 44 வயதுடைய மனைவி மற்றும் 17 வயதுடைய மகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

யட்டினுவர பிரதேச சபை உறுப்பினர் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளதாகவும் மற்றைய இருவரின் சடலங்கள் வீட்டின் அறைகளில் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## பகுப்பாய்வு திணைக்கள ஊழியர் போதைப்பொருளுடன் சிக்கினார்!

கொழும்பு, ஜூலை 30

போதைப்பொருள் வைத்திருந்ததற்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் பணி புரியும் அலுவலக உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலபே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹோகந்தர தெற்கு, குடாதெனிய பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் வைத்து நேற்று முன் தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டபோது அவரிடம் இருந்து 265 கிராம் ஹெரோயின் மற்றும் 250 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

58 வயதான அலுவலக உதவியாளர் ஹோகந்தர தெற்கில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கறுப்பு ஜூலை, செம்மணி மனிதப் புதைகுழி

# இனப்படுகொலைகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஜூலை 30

**கறுப்பு ஜூலை பேரவலத்தை நினைவுகூர்ந்தும், செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் வடக்கு - கிழக்கில் நிகழ்த்தப்பட்ட மனிதப் படுகொலைகளுக்கு நீதி கோரியும் இனி இதுபோன்ற கொடூரங்கள் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தினரால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியத்தின் அருட்தந்தையர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது "கறுப்பு ஜூலை சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் கொடூரம்" "செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும்" "தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட மனித புதைகுழிகளுக்கு சர்வதேச நீதி வேண்டும்" "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷம் எழுப்பினர்.

சர்வதேச நீதிப் பொறிமுறையின் கீழ் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (எ)




# 16 உதவித் தாதியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜூலை 30

அம்பாறை மாவட்ட விபுலானந்த புனர்வாழ்வு அமைப்பின் அனுசரணையில் நடத்தப்படும் உதவித்தாதிய பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மூன்றாவது தொகுதி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டு. குருக்கள்மடத்தில் நடைபெற்றது.

குருக்கள்மடம் விபுலானந்த முதியோர் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் அந்த அமைப்பின் தலைவர் தியாகராஜா பெரியசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனை பணிப்பாளர் கு. சுகுணன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

உதவித் தாதிப் பயிற்சியை நிறைவு செய்த மூன்றாவது தொகுதி மாணவர்கள் 16 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)



# திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

திருகோணமலை, ஜூலை 30

திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அரசாங்க அதிபர் ஜீ. எம். ஹேமந்த குமாரவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன, உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், மாகாண பிரதம செயலாளர், திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த கால வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தியமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் மதிப்பீட்டு நடவடிக்கைகளும் இடம்பெற்றன. வீதி உட்கட்டமைப்பு வசதிகளை திருகோணமலை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# நுகர்வோர் ஆலோசனை குழுவுக்கு பிராந்திய வலையமைப்பு நிறுவுதல்

## திருகோணமலையில் விசேட கலந்துரையாடல்

திருகோணமலை, ஜூலை 30

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் நுகர்வோர் ஆலோசனைக்குழுவின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நுகர்வோர் ஆலோசனைக்குழுவுக்கு பிராந்திய நுகர்வோர் வலையமைப்பை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிராந்திய நுகர்வோர் வலையமைப்பானது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் ஆலோசனைக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை துறைகளில் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல், ஒழுங்குமுறை முடிவெடுப்பதில் நுகர்வோர் பங்கேற்புக்கான கட்டமைக்கப்பட்ட நுகர்வோர் தளத்தை வழங்குதல், சேவை தரநிலைகள், கட்டண




கட்டமைப்புகள் மற்றும் குறை தீர்க்கும் வழிமுறைகள் குறித்த நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் கல்வியை எளிதாக்குதல், பிராந்திய மட்டத்தில் நுகர்வோர் புகார்களைத் தீர்ப்பதில் உதவுதல், ஒழுங்குமுறை மற்றும் கொள்கை மேம்பாடுகள் குறித்து நுகர்வோர் ஆலோசனை குழுவுக்கு பரிந்துரைகளை வழங்குதல் ஆகியவை பிராந்திய நுகர்வோர் வலையமைப்பின் முதன்மையான நோக்கங்களாகும்.

பிராந்திய நுகர்வோர் வலையமைப்பானது பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டம் போன்ற மூன்று முக்கிய நிலைகளில் நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தீர்ப்பதற்கான பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு கட்டமைப்பாக அமைந்துள்ளது.

இதன்போது நுகர்வோர் விவகார பிரிவு, மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பிரதிப் பணிப்பாளர்களான ரொஷான் வீரசூரிய, தனுஜ் தனுஷ்க விஜேசூரியா, நுகர்வோர் விவகார பிரிவு உத்தியோகத்தர் எம். ரஹான் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# பாவனைக்கு உதவாத மீன் விற்பனை அதிகம்

கிண்ணியா, ஜூலை 30

திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் விற்பனை செய்யப்படுகின்ற பாவனைக்கு உதவாத மீன்கள் தொடர்பில் கிண்ணியா நகர சபைக்கு தொடராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெறுவதற்காக கிண்ணியா நகர சபை தவிசாளர் எம். எம். மஹ்தி தலைமையில் நேற்று முன்தினம் நகர சபை கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறிப்பாக வெளிப் பிரதேசங்களிலிருந்து வாகனங்களில் கொண்டுவரப்பட்டு விற்கப்படுகின்ற மீன்களில் பழுதடைந்த மற்றும் உடல் நலத்துக்கு கேடான போமலின் மற்றும் டயனமைட் பாவிக்கப்பட்ட மீன்கள் விற்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இந்தக் கலந்துரையாடலில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச செயலக பிரதிநிதி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், சமூக நிறுவனத் தலைவர்கள், மீனவ சங்கங்கள், கருவாடு பதனிடுவோர் சங்கம் என பல தரப்பினரும் பங்கேற்றனர்.

மக்களுக்கு சுகாதாரமான மீன்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக பொதுச் சுகாதார மருத்துவ பணிமனை, பொலிஸார், நகர சபை இணைந்து தொடரான பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்துவதென எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அனைத்துத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர். (எ)

# சித்தானைக்குட்டி சுவாமி 74ஆவது குருபூஜை விழா

காரைதீவு, ஜூலை 30

சித்தருள்சித்தர் சிறீ சித்தானைக்குட்டி சுவாமியின் 74 ஆவது குருபூஜையின் முத்துச்சப்பர வீதியுலா இன்று புதன்கிழமை அம்பாறை மாவட்டம் காரைதீவில் நடைபெறவுள்ளது.

காரைதீவு சிறீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் சுவாமியின் குருபூஜை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதற்காக சுவாமிகளின் படம் முத்து சப்பரத்தில் இன்று 30 ஆம் திகதி புதன்கிழமை வீதி வலம் வரவுள்ளது.

நாளை 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை சித்தர் ஆலயத்தில் சமயதீட்சை வழங்கப்படவுள்ளது.

மேலும் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்னதானம் மற்றும் திருவிளக்கு பூஜை என்பன நடைபெறவுள்ளன.

முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் 74 ஆவது குரு பூஜை நடைபெறவுள்ளது. (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து-கம்போடியா இடையே நிபந்தனையற்ற போர் நிறுத்தம்

## மலேசிய பிரதமர் தகவல்

கோலாலம்பூர், ஜூலை 30

**தாய்லாந்து - கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.**

தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய் மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹன் மானெட் ஆகியோர் மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரபூர்வ இல்லத்தில் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

கம்போடியா மற்றும் தாய்லாந்து தலைவர்களுடன் இணைந்து பேசிய மலேசிய பிரதமர் அன்வர், "கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே மிகவும் நேர்மறையான முன்னேற்றத்தை காணும் வகையில் நல்ல முடிவுகளை நாங்கள் கண்டிருக்கிறோம்" -என்று தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடனும் இணைந்து மோதலுக்கு அமைதியான தீர்வைக் காண மலேசியா நெருங்கிய தொடர்பில் உள்ளது என அன்வர் கூறினார். 28 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் கம்போடியாவும் தாய்லாந்தும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அன்வர் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கும், அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்குமான நடவடிக்கையில் முதல் படியாகும் என்றும் அன்வர் கூறினார்.

கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. மோதல்களைத் தொடங்கியதற்காக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். 5 நாள் நீடித்த இந்தப் போரில் இருதரப்பிலும் 35 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 2 இலட்சத்து 60,000இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்துள்ளனர். இரு நாடுகளும் தங்கள் நாட்டுத் தூதுவர்களைத் திரும்பப் பெற்றதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன. (எ)

# கனமழை, நிலச்சரிவு சீனாவில் 4 பேர் பலி

## 3 நாட்களுக்கு கடும் எச்சரிக்கை

பீஜிங், ஜூலை 30

சீனாவின் தலைநகர் பீஜிங் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், நிலச்சரிவு ஏற்பட்டு பல்வேறு கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பீஜிங்கின் மியுன் புறநகர் பகுதியில், 4,400இற்கும் மேற்பட்டோர் தொடர் மழை எதிரொலியாக, வேறு பகுதிகளுக்கு சென்று விட்டனர்.

கார்கள் மற்றும் லொறிகள் வெள்ள நீரில் மிதந்து வந்தன. குடியிருப்பு கட்டடங்கள் நீரில் மூழ்கி விட்டன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மின் துண்டிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். கனமழை, நிலச்சரிவால் 4 பேர் உயிரிழந்தனர். 8 பேரை காணவில்லை.

இந்தச் சூழலில், பீஜிங் மற்றும் 11 மாகாணங்களில் வெள்ள எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அடுத்த 3 நாட்களுக்கு வடக்கு சீனாவில் கனமழை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் கிழக்கே ஷான்டாங் மாகாணத்தில் இந்த மாதத்தில் வெள்ளம் எதிரொலியாக 2 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காணாமல் போனார்கள். இதேபோன்று சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் பல்வேறு கார்கள் மலைப் பகுதியில் அடித்து செல்லப்பட்டன. 5 பேர் உயிரிழந்தனர். (எ)

# உக்ரைன் உடனான போரை 12 நாளில் நிறுத்த வேண்டும்

## புடினுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 30

அடுத்த 10 முதல் 12 நாட்களுக்குள் உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா நிறுத்த வேண்டுமென அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கெடு விதித்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்பு உக்ரைன் உடனான போரை நிறுத்த புடினுக்கு 50 நாட்கள் காலக்கெடு விதித்திருந்தார் ட்ரம்ப். தற்போது அதை அவர் குறைத்துள்ளார்.

ஒரே இரவில் 300இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள், 4 ஏவுகணைகளை கொண்டு உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப் படை தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையே ட்ரம்ப்பின் போர் நிறுத்த முயற்சிக்கு பலன் கிடைக்காத சூழலில், அங்கு தாக்குதல் அதிகரித்த வண்ணம் உள்ளது.

"இனியும் காத்திருப்பதில் எந்தப் பலனும் இல்லை. போர் நிறுத்தம் சார்ந்த முன்னேற்றம் எதுவும் நடைபெறவில்லை. புடின் இது குறித்த முடிவை எடுக்க வேண்டும். மக்கள் அதிகளவில் உயிரிழக்கின்றனர். புடினின் செயல்பாட்டின் மீது அதிருப்தி கொண்டுள்ளேன். அவருடன் பேச்சுவார்த்தை நடத்த எனக்கு இப்போது ஆர்வம்இல்லை.

ரஷ்ய மக்களை நான் நேசிக்கிறேன். அதனால் கூடுதல் வரி விதிப்பது குறித்து கொஞ்சம் யோசிக்கிறேன். அதை ரஷ்யாவோடு செய்ய எனக்கு விருப்பம் இல்லை. அதனால் அடுத்த 10 முதல் 12 நாட்களுக்குள் போரை நிறுத்த வேண்டும் என கெடு விதிக்கிறேன். நான் அமைதியை விரும்புகிறேன். அது நடக்காத பட்சத்தில் தீவிர வரி விதிப்பை தவிர வேறு வழியில்லை" என ட்ரம்ப் கூறியுள்ளார். லண்டன் சென்றுள்ள ட்ரம்ப் அங்கு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரஷ்யா ஏற்றுமதி செய்யும் பொருட்களை வாங்கும் நாடுகளின் மீதும் கூடுதல் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் தாக்கம் உலகளவில் தீவிரமானதாக இருக்கும் என பார்க்கப்படுகிறது. (எ)


# எனது தலையீடு இல்லையென்றால் இந்தியா-பாக். போர் நீடித்திருக்கும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

லண்டன், ஜூலை 30

தனது தலையீடு இல்லையென்றால் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர் தொடர்ந்திருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்று பிரிட்டன் சென்ற ட்ரம்ப், அந்த நாட்டின் பிரதமர் ஸ்ரார்மரை டர்ன்பெர்ரியில் சந்தித்தார். இந்தச் சந்திப்புக்கு முன்னதாக உலக நாடுகளுக்கு இடையிலான போர் குறித்து ட்ரம்ப் பேசினார்.



"நான் மட்டும் இல்லையென்றால் இந்நேரம் ஆறு பிரதான போர் நம்மைச் சுற்றி தொடர்ந்திருக்கும். இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரும் அடங்கும். நேற்று (நேற்று முன்தினம்) நாங்கள் வணிகம் மேற்கொள்ளும் இரண்டு நாடுகளுடன் என்ன செய்தோம் என்பதை பார்த்து இருப்பீர்கள். (கம்போடியா மற்றும் தாய்லாந்து போரை குறிப்பிட்டு இதை ட்ரம்ப் தெரிவித்தார்).

இதில் பெரிய மோதல் என்றால் அது இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலானதுதான். ஏனெனில், அந்த இரு நாடுகளும் அணுசக்தி பலம் படைத்தவை. நான் அந்த நாடுகளின் தலைவர்களை அறிவேன். அதனால் அவர்களிடம் போரை நிறுத்தவில்லை என்றால் வர்த்தகத்தை தொடர முடியாது எனத் தெரிவித்தேன். அணு கதிர்வீச்சு மற்ற நாடுகளுக்கு பரவுவதை நான் விரும்பவில்லை என்று கூறினேன்.

போரை நிறுத்துவதில் நாங்கள் கொஞ்சம் சுயநலமாக செயல்பட வேண்டியுள்ளது. இப்படி பல போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ளேன். உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை நிறுத்த 50 நாட்கள் கெடு என்பதை இன்னும் குறைந்த காலகட்டத்தில் கொடுத்திருக்க வேண்டும். புடின் செயல்பாடு என்னை அதிருப்தி கொள்ள செய்துள் ளது"- என ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

# காஸாவில் தினமும் 10 மணி நேரம் தாக்குதல் நிறுத்தப்படும்- இஸ்ரேல்

காஸா, ஜூலை 30

காஸாவில் தினமும் 10 மணி நேரம் தாக்குதல் நிறுத்தப்படும் என்று இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

காஸாவில் போர் எதிரொலியால் உணவு கிடைக்காமலும் ஊட்டச் சத்து குறைபாட்டாலும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், போதிய உணவு கிடைக்காமல் காஸாவில் பட்டினி பிரச்னை பெரிய அளவில் உருவெடுத்துள்ளதால், இஸ்ரேலுக்கு சர்வதேச அளவில் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து காஸா சிற்றி, டெய்ர் அல்- பலாஹ் மற்றும் முவாசி ஆகிய மக்கள் அடர்த்தி நிறைந்த மூன்று பகுதிகளில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 10 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது. உணவு, மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை தினமும் காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை இந்த வழித்தடங்கள் வழியாக எடுத்துச் செல்லலாம் மற்ற பகுதிகளில், வழக்கம் போல் தாக்குதல்கள் தொடரும். மறு அறிவிப்பு வரும் வரை இது அமுலில் இருக்கும். காஸாவில் மா, சர்க்கரை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வான்வழியாக வீசியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் ஜோர்தானும் ஐக்கிய அரபு அமீரகமும் வான்வழியில் உதவிப் பொருட்களை போடுவதற்கு ஏதுவாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (எ)

# நியூயோர்க்கில் துப்பாக்கிச்சூடு: பொலிஸார் உட்பட 5 பேர் பலி

நியூயோர்க், ஜூலை 30

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்த நிலையில் இந்தத் தாக்குதலை நடத்திய நபர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

நியூயோர்க்கின் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள 44 மாடிகள் கொண்ட அலுவலக கட்டடத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. பல்வேறு முக்கிய நிறுவனங்கள் இயங்கும் அந்த கட்டடத்தில் மக்கள் கூட்டம் அதிகம் இருந்த மாலை நேரமான 06.30 மணியளவில் தாக்குதல் நடந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. இ. தீவுகள் அணியை வீழ்த்தி அவுஸ்திரேலியா அசத்தல் வெற்றி

கயானா, ஜூலை 30

5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 5 - 0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் முதல் 4 போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 4-0 என முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 5ஆவது ரி - 20 போட்டி நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்த மேற்கு இந்திய தீவுகள் அணி 19. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 170 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ஹெட்மையர் 52 ஓட்டங்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா தரப்பில் பென் துவார்ஷியஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 171 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலியா 17 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 5-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றியது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் ஓவன் 37 ஓட்டங்கள் எடுத்தார். (எ)



# கனடா ஓபின் ரென்னிஸ் மரியா சக்காரி வெற்றி


றொரண்டோ, ஜூலை 30

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரின் 2ஆவது சுற்றுக்கு மரியா சக்காரி முன்னேறினார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அங்குள்ள றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் கிரீஸ் நாட்டின் முன்னணி வீராங்கனையான மரியா சக்காரி, கனடாவின் கார்சன் பிரான்ஸ்டைன் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6-2 என்ற புள்ளிக் கணக்கில் மரியா சக்காரியும், 2ஆவது செற்றை 6-3 என்ற புள்ளிக்கணக்கில் கார்சன் பிரான்ஸ்டைனும் கைப்பற்றினர். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் ஆட்டம் அனல் பறந்தது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அனுபவம் வாய்ந்த மரியா சக்காரி 7-5 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# இந்தியாவுடன் 5ஆவது டெஸ்ட்: இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன், ஜூலை 30

இந்தியாவுக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் (4ஆவது போட்டி சமநிலை) முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நாளை மறுதினம் 31ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில் இந்தப் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான அந்த அணியில் ஜேமி ஒவர்டன் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றபடி 4ஆவது போட்டிக்கான அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களே தொடருகின்றனர்.

இங்கிலாந்து அணி விவரம் பின்வருமாறு:- பென் ஸ்டோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர், கஸ் அட்கின்சன், ஜேக்கப் பெத்தேல், ஹாரி புரூக், பிரைடன் கார்ஸ், ஜாக் கிராலி, லியாம் டாசன், பென் டக்கெட், ஜேமி ஓவர்டன், ஒலி போப், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜோஷ் டோங், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

# ஆஸி. ஆடுகளங்கள் சாதகமாக இருக்காது

## ஸ்டீவ் ஸ்மித் தெரிவிப்பு

மெல்பேர்ன், ஜூலை 30

ஆஸி. ஆடுகளங்கள் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்காது என்று ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. வழக்கமாக இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும். ஆனால் இந்தத் தொடரில் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக ஆடுகளங்கள் உள்ளன.

இதை பல்வேறு தரப்பினரும் விமர்சித்து வருகின்றனர். இந்த நிலையில், ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்காது என இங்கிலாந்து அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆஸி. வீரர் ஸ்டீவ் ஸ்மித் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு நிச்சயம் சவாலாக இருக்கும். சில காலமாக இங்கிலாந்தில் ஓட்டங்கள் குவிப்புக்கு ஏதுவான தட்டையான ஆடுகளங்களில் அவர்கள் விளையாடி வருகின்றனர். ஆனால், அவுஸ்திரேலியாவில் முன்னணி வீரர்கள் ஓட்டங்கள் சேர்ப்பது கடினம். கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளாக அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் அப்படித்தான் உள்ளன.

ஒலிம்பிக் தொடருக்கான அணியில் இடம் பிடிக்கும் நோக்கத்துடன் உள்ளூர் கிரிக்கெட்டில் அதிகம் விளையாடி வருகிறேன். நான் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்ததற்கும் இதுதான் காரணம்- என்றார். (எ)



# கனடா ஓபின் ரென்னிஸ் டிரிஸ்டன் முன்னேற்றம்



றொரண்டோ, ஜூலை 30

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் டிரிஸ்டன் போயர் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அங்குள்ள றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் டிரிஸ்டன் போயர், சகநாட்டவரான அலெக்சாண்டர் கோவாசெவிக் உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய டிரிஸ்டன் போயர் 7-5, 7-6 (7-3) என்ற செற் கணக்கில் அலெக்சாண்டர் கோவாசெவிக்கை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# இந்திய வீரர் துருவ் ஜுரெல் வித்தியாசமான சாதனை

மான்செஸ்டர், ஜூலை 30

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர் துருவ் ஜுரெல் வித்தியாசமான உலக சாதனை படைத்துள்ளார்.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

முன்னதாக மான்செஸ்டரில் நடைபெற்ற 4ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின்போது இந்திய விக்கெட் காப்பாளர் ரிஷப் பண்ட் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதியில் வெளியேறினார். [illegible] முறிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் 2ஆவது நாளில் இந்திய அணி விக்கெட்களை இழந்தபோது வலியை பொருட்படுத்தாமல் மீண்டும் களத்திற்கு வந்து அரைச்சதம் அடித்து அசத்தினர்.



ஆனால் விக்கெட் காப்பாளராக செயல்படவில்லை. அவருக்கு பதிலாக துருவ் ஜுரெல் மாற்று விக்கெட் காப்பாளராக செயல்பட்டார். அவர் இந்த போட்டியில் தலா 2 ஸ்டம்பிங் மற்றும் பிடியெடுப்பு செய்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் அதிக ஸ்டம்பிங் செய்த மாற்று விக்கெட் காப்பாளர் என்ற வித்தியாசமான உலக சாதனையை துருவ் ஜுரெல் படைத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத்தில்....

ராஜபக்ஷ நேற்று முன்தினம் வழக்கில் முன்னிலையாகவில்லை. இதையடுத்து, அவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மீண்டும் இந்த வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ஐ)

## நல்லூர்...

முன்னிட்டு ஆலயத்தை சுற்றியுள்ள வீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றைய தினம் ஆலய முகப்பு வீதியில் இராணுவ வாகனம் ஒன்று நுழைந்தது. இராணுவத் தினரின் இந்த செயலால் அங்கிருந்த பக்தர்கள் விசனமடைந்தனர். இதனிடையே, இராணுவத்தின் இந்த செயல்பாட்டுக்கு பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், கடந்த ஆண்டு திருவிழாவின்போதும் பிக்கு ஒருவர் இராணுவ வாகனத்தில் ஆலய சுற்றாடல் பகுதிக்குள் நுழைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரிக்ரொக்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

புலம்பெயர் நாடு ஒன்றிலிருந்து விடுமுறைக்காக சொந்த இடத்துக்கு திரும்பிய பெண் ஒருவர் தன்னுடைய நெருங்கிய உறவினரான இளம் பெண்ணை (கைதான யுவதி) உதவிக்காக தன்னுடன் வைத்திருந்துள்ளார். ஒரே வீட்டில் இருவரும் வசித்த நிலையில், தனது நகைகள் சிறிதுசிறிதாக காணாமல் போவதை அவர் உணர்ந்துள்ளார். இதையடுத்து, குறித்த யுவதியை வீட்டிலிருந்து வெளியேற்றியுள்ளார்.

இந்நிலையில், தனது உடைமைகளை எடுத்துச் செல்லப் போவதாகக்கூறி மீண்டும் வெளிநாட்டு பெண்ணின் வீட்டுக்கு யுவதி வந்துள்ளார். யுவதி தனது உடைமைகளை எடுத்துக்கொண்டிருந்தபோது வெளிநாட்டிலிருந்து வந்த பெண் யுவதியை இருக்குமாறு கூறிவிட்டு குளியலறைக்கு சென்றுள்ளார். அவர் திரும்பி வந்தபோது யுவதி அங்கிருக்கவில்லை. அத்துடன், பெண்ணின் தாலிக்கொடியும் காணாமல் போயிருந்தது.

இது தொடர்பில், வெளிநாட்டு பெண் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் யுவதியை கைது செய்து விசாரித்தனர்.

இதன்போது, ரிக்ரொக் சமூக வலைத்தளம் மூலம் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் யுவதியுடன் அறிமுகமாகியுள்ளார். இதன் பின்னர் இருவரும் காதலித்துள்ளனர். இந்நிலையில், காதலனுக்கு உயர்தர மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கவும் காதலன் சொகுசு வாழ்க்கை வாழவும் குறித்த யுவதி தனது உறவினரான வெளிநாட்டிலிருந்து வந்த பெண்ணின் நகைகளை திருடி கொடுத்துள்ளார். இவ்வாறு 19 பவுண் நகைகளை காதலனிடம் தாம் கொடுத்தார் என்று யுவதி வாக்குமூலம் அளித்துள்ளார்.

யுவதியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரின் காதலன் என்று கூறப்படும் இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசார ணைகளில் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப் படும் இளைஞரின் காதலிகள் என்று கூறப்படும் மேலும் இரு பெண்கள் மற்றும் இளைஞனின் சித்தப்பா, சித்தி என மேலும் ஐவரும் நகைகளை வாங் கிய நபருமாக ஆறு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேகநபர்கள் ஏழு பேரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## வாள்வெட்டில்...

இடம்பெற்றுள்ளது.

இதில், படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஊரெழுவை சேர்ந்த நபர் ஒருவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## மாகாண...

முன்வைத்துள்ளது. மாகாண சபைகள் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையிலா நடத்துவது என்பதில் பெரும் சட்டச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பது தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் பலவற்றுக்கு யோசனைகளை முன்வைத்துள்ளோம். மாகாண சபைகள் தேர்தலை எந்த தேர்தல் முறையில் நடத்துவது என்ற சட்டச் சிக்கலுக்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காண முடியும். தேர்தல் முறைமையை சிறந்த முறையில் தீர்மானித்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்த நாம் தயாராகவே உள்ளோம். ஆகவே, சட்ட சிக்கலுக்கு தீர்வு காணும் பொறுப்பு சகல அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

தேர்தல் தினத்தன்று கடமைகளில் ஈடுபடும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் தபால்மூலம் வாக்களிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமாயின் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். பாராளுமன்றம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வெளிநாடுகளுக்கு செல்லும் பயணம் வெறும் சுற்றுப்பயணமாகும். அவர் நாடு நாடாக சென்று கொண்டிருக்கி றார். இதனை விடுத்து அவரின் வெளி ாட்டு பயணங்களால் நாட்டுக்கு எந்த ஒரு நன்மையும் இல்லை. மாலைதீவு செல்ல முன்னர் ஜேர்மனிக்கு சென்றி ருந்தார். அதனால் எமக்குக் கிடைத்த நன்மை என்ன? ஜேர்மனியுடன் எட்டப் பட்ட இணக்கப்பாடுகள் என்ன?

அமெரிக்காவுக்கு சென்றிருந்தால் வரி தொடர்பில் பேச்சுகளை முன்னெ டுத்து தீர்வு காண்பதற்காக சென்றிருக்கிறார்கள் என்று கூறலாம். ஆனால், இவ்வாறான பயணங்கள் எதற்காக இடம் பெறுகின்றன? எனவேதான் இவற்றை சாதாரண சுற்றுப் பயணம் என்று கூறுகிறோம். இதற்கு செலவிடுவது யார்?

ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு செல்லக்கூடாது என நாம் கூறவில்லை. ஆனால், ஒவ்வொரு பயணத்தின் மூலமும் நாட்டுக்கு ஏதாவது நன்மை கிடைக்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகிறோம்.

மறுபுறம் மீண்டும் கொள்கலன் சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது. எமக்குக் கிடைத்த தகவலின்படி சுங்கத் திணைகளத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் சுமார் 400 கொள்கலன்களில் உப்பு இருந்தன என்று கூறப்படுகிறது.

இந்த உப்பு தொகை எதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது? அவற்றின் தரம் மற்றும் அவற்றை விடுவிப்பதில் உள்ள ஆவணங்களில் உள்ள குறைபாடுகளாலேயே அவை தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது. ஆனால், இதே கொள்கலன்களுடன் வந்த மேலும் ஆறு கொள்கலன்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மாத்திரம் எதற்காக விசேட சலுகை வழங்கப்பட்டது? - என்றார். (ஐ)

# போலி குற்றம் சுமத்தல்களை எதிர்க்கட்சி தவிர்க்கவேண்டும்

## மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 30

“அரசாங்கத்தின்மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்”, என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் எம். பி. திஸ்ஸ குட்டியாராச்சிக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தாக்கல் செய்த அவதூறு வழக்கு நேற்றைய தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் பின்னர் அவர் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

2023 ஒக்ரோபர் 6ஆம் திகதி சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான திஸ்ஸ குட்டியாட்சி தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கமீது போலியான பல



குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

“மக்கள் விடுதலை முன்னணியின் வங்கி கணக்குக்கு வெளிநாடுகளில் இருந்து பல பில்லியன் டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளது என்றும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற 500 கோடி டொலரை தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மோல்டாவா நாட்டில் முதலீடு செய்துள்ளார் என்று திஸ்ஸ குட்டியாராச்சி குற்றச்சாட்டியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க 2023 ஒக்ரோபர் 13 ஆம் திகதியன்று திஸ்ஸ குட்டியராட்சிக்கு எதிராக அவதூறு வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு இன்று (நேற்று) கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தான் பொய்யுரைத்தார் என்று திஸ்ஸ குட்டியாராச்சி நீதிவான் முன்னிலையில் குறிப்பிட்டு கவலை தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்துக்கு எதிராகவும் அவதூறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்க்கவேண்டும். அனைத்து பிரச்னைகளுக்கும் நீதிமன்றத்தின் ஊடாக தீர்வு காண்போம் - என்றார். (ஐ)

## இலங்கை...

ரூவான் அசார்.

திருகோணமலை மூலோபாய கற்கைகளுக்கான நிலையத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே இந்தியா, இலங்கை மற்றும் பூட்டான் நாடுகளுக்கான தூதுவர் ரூவான் அசார் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நாம் இலங்கையுடன் ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இராஜதந்திர உறவுகளைப் பேணி வருகிறோம். குறிப்பாக, உள்நாட்டுப் பாதுகாப்பு சவால்கள் நிறைந்த காலங்களில் நாம் நெருக்கமாக செயல்பட்டிருக்கிறோம். இருந்தபோதிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் முழுஆற்றலும் பயன்படுத்தப்படாமல்தான் இருக்கிறது.

“இலங்கையின் உள்ளார்ந்த விடயங்களையும் உள்நாட்டு அரசியல் நிலைமையையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், நெருக்கடிகளுக்கு எதிர்வினையாக மட்டுமல்லாமல், பரஸ்பர வாய்ப்புகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளுதல் என்னும் அடிப்படையில் நமது உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்று நான் நம்புகிறேன். புதிய அரசாங்கத்துடன் நாங்கள் பேசி வருகிறோம். அனைவருக்கும் செழிப்பை வழங்கும் பொருளாதார வளர்ச்சியின் தொலைநோக்கு பார்வை ஒன்றுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

“2019ஆம் ஆண்டு நடந்த துயரமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உலகளாவிய பயங்கரவாத வலையமைப்புகள் எல்லைகள் இல்லாமல் எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கான ஒரு தெளிவான நினைவூட்டலாக இருக்கிறது. மத்திய கிழக்கு மோதல்களில் நேரடியாக ஈடுபடாத நாடுகள்கூட இஸ்லாமிய பயங்கரவாதத்திலிருந்து விடுபடவில்லை என்பதையும் அது எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன், அறுகம்குடாவை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற விடயங்கள், நிலையான விழிப்புணர்வு மற்றும் முன்னேற்பாட்டுடன்கூடிய ஒத்துழைப்பின் தேவைப்பாட்டை சுட்டிக்காட்டுகிறது.

இஸ்ரேல் பல தசாப்தங்களாக இதே போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளது. உளவுத்துறை, தொழில்நுட்பம் ஆகிய இரண்டிலும் மிகவும் மேம்பட்ட பயங்கரவாத முறியடிப்புத் திறன்களை நாங்கள் வளர்த்துள்ளோம். இந்த நிபுணத்துவத்தை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராகவும் - விருப்பமாகவும் இருக்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## நேற்று...

மனிதப் புதைகுழிகளில் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 111ஆக அதிகரித்தது.

இதேநேரம், நேற்றைய தினம் மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன. இவற்றுடன், இதுவரை 99 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதைகுழியில் நேற்றுடன் 33ஆவது நாளாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரோகரா...

பூசை நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பக்தர்களின் “அரோகரா” கோஷம் முழங்க கொடியேற்றம் நடை பெற்றது.

இதன்போது, பிள்ளையார், முருகப்பெருமான், வள்ளி - தெய்வானை மூஷிகம், மயூரம், அன்னம் என மூன்று தங்க வாகனங்களில் உள்வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

நேற்றைய தினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன், அங்கப்பிரதட்சணை செய்தும் அடியடித்தும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர் வரும் ஒகஸ்ட் 7ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 19ஆம் திகதி மாம்பழ திருவிழாவும் 20ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் 21ஆம் திகதி தேர்த் திருவிழா அடுத்தநாள் 22ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-03-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மணல் அகழ்வு விவகாரத்தால் பருத்தித்துறை சபையில் அமளி

வடமராட்சி, ஜூலை 30

நல்லூர் முருகன் ஆலயத் துக்கு மணல் கொண்டு செல்வதற்கு வீதியை பயன்படுத்த அனுமதி வழங்கப் பட்டமை தொடர்பில் பருத்தித்துறை பிரதேச சபையில் நேற்று கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் ஆரம்பமானது.

சபை தொடங்கியதும், நல்லூர் முருகன் ஆலய வீதியில் மணல் பரப்புவதற்கான மணல் ஏற்றுவதற்கு வீதியை பயன்படுத்த தவிசாளரால் தன்னிச்சையாக அனுமதி வழங்கப்பட்ட விவகாரம் சூடுபிடித்தது. இது தொடர்பில் நீண்டநேரம் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

அத்துடன், இனிவரும் காலத்தில் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு வழங்கப்பட்ட மணலை மீளப் பாவிக்கக் கோருவது என்றும் வரும் காலங்களில் வடமராட்சி கிழக்கிலிருந்து மணல் மணல் வழங்குவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட் டது.

நேற்றைய அமர்வில் பருத்தித்துறை பிரதேச சபையின் சகல உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# "மாகாண சபைத் தேர்தலுக்கான ஆரம்ப கட்ட பணி முன்னெடுப்பு"

கொழும்பு, ஜூலை 30

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கான சட்ட கட்டமைப்பைத் தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், அதற்கான எல்லை நிர்ணய செயல்முறை இதுவரை நிறைவடையவில்லை என்றும் அவர் கூறினார். அத்துடன், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான புதிய தேர்தல் முறைமைக்கான வரைவு விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது. அதற்கான சட்ட வரைவை விரைவாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

முன்னதாக மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு உட்பட்ட பல அமைப்புக்கள் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கரையோர பகுதிகளில் சிரமதானம்

மன்னார், ஜூலை 30

மன்னாரில் நேற்று பல கடற்கரையோரங்களில் சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.

ஓர் அழகான கடற்கரை மனங்கவரும சுற்றுலா தளம் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - தள்ளாடி - 54ஆவது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் கடற்கரைகள் நேற்று சுத்தமாக்கப்பட்டன. இதன்படி, வங்காலை, கீரி, சௌத்பார், தலைமன்னார், முத்தரிப்புத்துறை ஆகிய கடற்கரையோரங்கள் தூய்மையாக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சர்வமத தலைவர்கள், மக்கள், உள்ளூராட்சி தலைவர்கள், இராணுவத்தினர், கடற்படையினர் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில்

# ஜனாதிபதியிடம் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ள திஸ்ஸ குட்டியாராச்சி!

கொழும்பு, ஜூலை 30

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் அவதூறான கருத்தை வெளியிட்டமைக்காக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளார்.**



ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தொடர்பில் தான் தெரிவித்த கருத்துக்கு நிபந்தனையின்றி வருத்தம் தெரிவிப்பதாக அவர் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவதூறுக்கு 10 பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தாக்கல் செய்த வழக்கு தொடர்பான நேற்றைய நீதிமன்ற நடவடிக்கைகளின் போது, அவரது சட்டத்தரணிகள் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த விசாரணைக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், நேற்று நீதிமன்றில் நேரில் முன்னிலையானதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் வழக்கில் பரஸ்பர தீர்வை எட்டினர்.

இந்த வழக்கு 2023 ஒகஸ்ட் 19 அன்று மத்திய கொழும்பில் பொது ஜன பெரமுன நடத்திய ஒரு பொதுக் கூட்டத்தில் இருந்து எழுந்தது.

அங்கு ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி, அநுரகுமார திஸாநாயக்க மொல்டோவில் ஐந்து பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளார் என்று கூறினார்.

இந்த அறிக்கை தன்னை ஊழல் வாதியாகவும் நேர்மையற்ற நோக்கங்களுடன் செயல்படுபவரா கவும் சித்தரிக்கும் நோக்கம் கொண் டதாக ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க வாதாடினார். (அ)

# மாலைதீவு ஜனாதிபதியால் அநுரவுக்கு இராப்போசனம்

மலே, ஜூலை 30

மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மாலைதீவு ஜனாதிபதியால் நேற்று முன் தினம் இரவு "குரும்பா மோல்டீவ்ஸ்" விடுதியில் விசேட இராப்போசன விருந்துபசாரம் வழங்கப்பட்டது.

இந்த விசேட இராப்போசன விருந்துபசாரத்தை மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு மற்றும் முதல் பெண்மணி ஆகியோர் ஏற்பாடு செய்தனர். வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹெராத் மற்றும் இலங்கைத் தூதுக்குழுவினர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

# நாடு திரும்பினார் நாமல்!

கொழும்பு, ஜூலை 30

அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றினால் நேற்று முன் தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாலைதீவிலிருந்து வந்ததாகவும், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேறுவதைக் காண முடிந்ததாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

வழக்கொன்றுக்காக, நீதிமன்றில் முன்னிலையாக தவறியமையினால் நேற்று முன் தினம் அவரை கைதுசெய்யுமாறு அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

அதன்போது, நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக மாலைதீவு சென்றுள்ளமையினால் அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், திருமண நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் ஒரே விமானத்திலேயே நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 14 இந்திய மீனவர்கள் கைது!




மன்னார், ஜூலை 30

எல்லைதாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 இந்திய கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதற்கமைய, தலைமன்னாருக்கு வடக்காக 5 பேரும், பத்தலங்குண்டு பகுதியில் 9 கடற்றொழிலாளர்களும் நேற்று அதிகாலை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக இந்த மாதத்தில் கடந்த 13 ஆம் திகதி ஏழு இந்திய கடற்றொழிலாளர்களும் 21 ஆம் திகதி நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில் இந்திய கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்படுவதை தமிழக கடற்றொழிலாளர் சங்கங்கள் கண்டித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பு விடயத்தில் இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் எனவும் அந்த சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன. (அ)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் மணல் அகழ்வு செய்யப்படாது

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பகுதியில் எதிர்வரும் காலங்களில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட மாட்டாது என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் உறுதியளித்ததாக வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கலைச்செல்வன், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இ. முரளிதரன்,

பிரதேச இளைஞர் சம்மேளன தலைவர் ஏ. து. நிதர்சன் உட்பட பலரும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் சந்தித்தனர்.

இதன்போது, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளருடன் மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் சந்திப்பில் பங்கேற்றார். (எ)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு நாட்டில் பற்றாக்குறை இல்லை!

## கூறுகின்றது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் மிகவும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் கலந்துரையாடலின் போதே சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடங்களில் கொள்முதல் நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தற்போதைய மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்கான கொள்முதல் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மருந்துப் பற்றாக்குறை விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் உறுதியளிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் 80 முதல் 90 சதவீதமான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைக்கும் என சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org